உ

சிவமயம்

ஐம்பத்திநான்காவது

## அகஸ்திய மகாமுனிவர்

# சுத்தஞானம் — 9

பன்னிரண்டுகாலான புரவியப்பா
பாங்காகமூலவெளி தன்னில்நிற்கும்
நன்னயமாய்வாசிதனி லேறிக்கொண்டு
நாட்டியத்தநடுவீடு தன்னிற்சென்றால்
முன்னின்றமுப்பாழிக் கப்பாலேறி
முகப்புண்டுமுச்சந்தி வந்துகூடும்
சின்னஞ்சிறுவாசல்கடந் தப்பாற்சென்றால்
சிதம்பரமுங்கண்டுமுத்தி சித்தியாமே. 1

பன்னிரண்டுபேரான சூத்திரற்கு
பதியாகநின்றபொருள் பகரக்கேளு
விதிமுறையாய்ச்சுழிநடுவே மூளைத்தெழுந்து
விளங்கிநின்றஓங்கார ஸ்தம்பத்துச்சி
அதிவிதங்காணுகாயம் ஆதாரபீடம்
அமர்ந்தபராபரத்திநிலை யறியவேண்டி

நிதமான திருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசிக்கஅவர்க்குமுத்தி சித்தியாமே. 2

பத்துதிக்கும்பதினாறு கோணந்தானும்
பாங்கானபலகோடி யண்டமெல்லாம்
சுத்தநின்றஐங்கருவிக் காதியான
சொல்லறியதத்துவத்தின் தொகுதிமுத்தி
அத்திமுதலெறும்புகடை தானாய்நின்ற
அதிகபொருளிதனையறிந் துண்பாராகில்
சித்தமதில்திருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசிக்கஅவர்க்குமுத்தி சித்தியாமே. 3

ஒன்பதெனும்வாசலது உலகந்தன்னில்
உணர்வார்கள்எல்லோரும் வந்துகாண்பார்
அன்புடையஒருவாசல் ஒருவர்காண்பார்
அடுத்தடுத்தவாசல்கடந் தப்பாற்றாண்டி
வண்புடையமயிர்ப்பால் மீதிலேறி
மனதுதுணிந்துருகிநின்ற மகிழ்வினோடு
தென்பாகதிருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசிக்கஅவர்க்குமுத்தி சித்தியாமே. 4

எட்டெழுத்தாயிரண்டெழுத்தா யேகமாகி
யியங்கிநிற்கும்பெருமைதனை யெவருங்காணார்
கெட்டெழுத்தின்வட்டெழுத்தின் மேலேநிற்கும்
நிலையறிந்துவுரைத்திடுவோர் குருவுமாகும்

விட்டிடமுந் தொட்டிடமும் அறிந்தாயானால்
விளங்கிநின்ற அகாரமுதல் உகாரங்காணுந்
திட்டமதில் திருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசிக்க அவர்க்குமுத்தி சித்தியாமே. 5

ஏழானயுபாதியென்று வெளிமேயல்ல
யிதுகடக்கும்வாறதுதா னியம்பக்கேளு
வேளானமன்மதனை காலால்நீக்கி
விளங்கிநின்றங்கிதனை மேலேயேற்று
கோளானகருவியெல்லாம் வீரிட்டோடும்
கூறுவதுமேலான குறிப்புங்காணும்
தேளானபசியடங்க அமிர்தமுண்டு
திருநடனங்காணமுத்தி சித்தியாமே. 6

ஆரானகோட்டைக்குள் மூலவட்டம்
அதினாலொத்தளமே சுவாதிட்டானம்
கூரானகோணமது கொத்தலிங்கன்
கூறியபிறைமேயாட்டை கொத்தளமேபத்து
வீரானவஞ்சுகதமே கொத்தளமீராறு
விசுத்தியறுகோணங் கொத்தளமீரெட்டு
தோராதவட்டமிரு கொத்தளந்தான் மேலே
சிதம்பரமுங்காணமுத்தி சித்தியாமே. 7

ஐந்தானவெழுத்தது தான் விபரங்கேளு
அப்பனே பிரிதிவுக்கு நங்கென்றோர்சொல்
சிந்தையதாய் அப்புவுக்கு மங்கென்றோர்சொல்
சாதகமாய்த்தேயுவிலே சிங்கென்றோர்சொல்
நிந்தையாய்வாய்வுக்கு வங்கென்றோர்சொல்
விளங்குகின்ற ஆகாயம் யங்கென்றோர்சொல்
சிந்தையில்வகைதெளிந்து சொன்னயானால்
சிதம்பரமுங்காணமுக்தி சித்தியாமே. 8

நாலானவேதத்தின் முடிவில்நிற்கும்
நாதாந்தப்பொளியைக் காணவேண்டி
மூலதளம்முளைத்தெழுந்த வகாரமேலே
முட்டிநின்றகம்பத்தின் முடிவிலேறி
காலகாலமறுப்பதற்கு மேலேனிக்கு
காரணமும்பூரணமுங் கலந்துதோணுஞ்
சீலமதாய்த்திருச்சிற்றம் பலத்தைக்கண்டு
தெரிசித்தவர்க்குமுக்தி சித்தியாமே. 9

அகஸ்தியர் சுத்தஞானம் - 9

முற்றிற்று.

உ

சிவமயம்

ஐம்பத்தைந்தாவது

# அகஸ்திய மகாமுனிவர்

# ஞானம் — 13

கர்ப்பமென்னவெகுதூரம் போகவேண்டாம்
கனமலையில்குவடுகனி லலையவேண்டாம்
கர்ப்பமென்னநாகமது வொருதலையில்நின்று
சாகாதகால்கண்டு முனையிலேறி
நிர்ப்பமென்றுமனமுறுத்து மனதில்நின்று
நிஜமானகருநெல்லி வெண்சாரைகாணும்
சொற்பமென்றுவிட்டுவிட்டா லலைந்துபோவாய்
துரியமென்றபராபரத்திற் சென்றுகூடே. 1

கூடப்பா துரியமென்ற வாலைவீடு
கூறியநாதாக்கள் மயேஸ்வரமேயென்பார்
நாடப்பா அவள்தனையே பூசைபண்ணு
நந்திசொலுசிங்காரந் தோணுந்தோணும்
மூடப்பாசிகாரவதுர எல்லாந்தோணும்
ஊமையென்றமிர்தவெள்ளம ஆரலாகும்
தேடப்பாமிதுதேடு காரியமாகுஞ்
செகத்திலேயிதுவல்லோ சித்தியாதே. 2

ஆமென்றபூரணந்தான் சுழிமுனையிற்பாரு
அழகானவிந்துநிலை சந்திரனிற்பாரு
ஓமென்றரீங்காரம் புருவமையம்பாரு
வுத்தமனை வில்லென்ற வீட்டிற்காணும்
வாமென்றஅவள்பாதம் பூசைபண்ணு
மற்றொன்றுபூசையல்ல மக்காள்சொன்னேன்
பாமனென்றபரமனல்லோ முதலெழுத்தாம்
பாடினேன்வேதாந்தம் பாடினேனே. 3

பாடுகிறபொருளெல்லாம் பதியவேயாமம்
பதியில்நிற்கும்மக்ஷரந்தான் அகாரமாகும்
நாடுகின்றபாமனது ஓங்காரமாகும்
நலம்பெரியபசுதானே உகாரமாகும்
நீடுகின்றசுழிமுனையே தாரையாகும்
நின்றதொருயிடகலையே நாதவிந்தாம்
மூடுகின்றஓங்கார வித்தையாகும்
வெளியான அரியெழுத்தை யூணிப்பாரே. 4

ஊணியதோர் ஓங்காரம் மேலுமூண்டு
வுத்தமனை கீழூண்டு யூணிப்பாரு
ஆணியம்நடுநாடி நடுவேமூட்டுப்
ஆச்சரியமெழுத்தெல்லாம் அடங்கிநிற்கும்
வணியாயிருக்குமடா அந்தவீடு
வகாந்தமாகி எழுத்தைப்பாரு

தோணிபோற்காணுமடா அந்தவீடு
சொல்லாதேயொருவருக்குந் துறந்திட்டேனே.

துறந்திட்டேன்மேல்மூலங் கீழ்மூலம்பாரு
துயரமாய்நடுநிலையா யூணிப்பாரு
அறைந்திட்டேன்நடுமூலம் கடுநாடிப்பார்
அப்பவல்லோவறைதாக்கும் தாரைகாணும்
உறைந்திட்டஐவருந்தான் நடனங்காணும்
ஒளிவெளியுஞ்சிலம்பொலியு மொன்றாய்க்காணு
ணிறைந்திட்டபூரணமு மிதுதானப்பா
நிஜமானபேரொளிதா னிலைத்துப்பாரே. 6

சும்மாநீபார்க்கையிலே மனத்தையப்பா
சுழிமுனையிலேயொட்டியங்கே காலைப்பாரு
அம்மாநீதேவியென்று அடங்கிப்பாரு
அப்பவல்லோகாயசித்தில் யோகசித்தி
உம்மாவும்அம்மாவும் அதிலேகாணும்
ஒருமனதாய்ச்சுழிமுனையில் மனத்தைவூணு
நம்மாலேஆனதெல்லாஞ் சொன்னோமப்பா
நாதாக்களிதையாரும் பாடார்காணே. 7

காணுகின்றஅலங்கார வட்டஞ்சுத்து
கனலெழும்பிகண்ணிலே கடுப்புதோன்றும்
பூணுகின்றபிடகலையில் பாம்போலாடும்
பொல்லாததேகமென்று வுருகிப்போகும்

ஆணுவங்களானதெல்லா மொழிந்துபோகும்
அத்துவிததுரியாஷ்ட மாடிநிற்கும்
ஊணியதோரெழுத்தையெல்லாந் தேவியாகும்
ஓங்காரக்கம்பமென்ற வுணர்வுதானே. 8

உணாவென்றாச்சந்திரனி லேறிப்பாரு
ஓடியங்கேகலையென்ற எழுத்தில்நில்லு
அணுவென்றால்மனையாகுஞ் சிவனையுச்சி
அகாரமென்னபதியுமென்ன சூட்சமாகுங்
கணுவென்னவிற்புருவ மகண்டவீதி
கயிலாயமென்றதென்ன பாத்தின்வீடு
துணுவென்னசூரியன்றன் னெருப்பைக்கண்டு
தூணென்றபிடரியிலே தாங்குதாங்கே. 9

மூவெழுத்துமோரெழுத்து மாகிநின்ற
மூலமதையறிந்துரைப்போர் குருவுமாகும்
ஊவெழுத்துக்குள்ளேதா னிருக்குதப்பா
உணர்வதுவேகண்டறிந்தா னவனேயாசான்
யாவருக்குந்தெரியாது வறிந்தோமென்று
அவரவர்கள்சொல்வார்க ளறியாமூடர்
தேவரோடுமாலயனுந் தேடிக்காணார்
திருநடனங்காணமுத்தி சித்தியாமே. 10

ஈரெழுத்துமோரெழுத்து மாகியங்கே
யியங்கிநிற்குமசைவையப்பா மூலத்துள்ளே
வேரெழுத்தும்வித்தெழுத்து மிரண்டுங்கொண்டு
வித்திலேமுளைத்தெழுந்து விளங்கிநிற்கும்

சீரெழுத்தையுணிந்ல்ல வாசியேறி
    தெருவீதிகடந்தமணி மண்டபத்து
தாளரத்துட்பொருளாம் பரத்தைநோக்கி
    சார்ந்தவர்க்குசித்திமுத்தி தருகுந்தானே. 11

ஏகமெனுமோரெழுத்தின் பயனைப்பார்த்து
    யெடுத்துரைத்துமிவ்வுலகி லெவருமில்லை
ஆகமங்கள் நூல்கள்பல கற்றுக்கொண்டு
    அறிந்தோமென்பார் மவுனவித்தை அவனேயும்
வேகாத்தலைசாகாக்கால் விரைந்துகேளு
    அதையெடுத்துரைப்பவனே ஆசானாகும்
தோகமதிலோரெழுத்தைக் கண்டோன்ஞானி
    திருநடனங்காணமுக்தி சித்தியாமே. 12

குருவானுயுமைபாக னெனக்குத்தந்த
    கூறியஞானமது பத்தின்மூன்றும்
பொருளாகச்சொல்லிவிட்டே னப்பாநீங்கள்
    பொருளறிந்தாற்பூரணமும் பொருந்திகாணும்
அறியார்களிந்நூலைப் பழித்தபேர்க
    ளருநரகிற்பிசாசெனவே யடைந்துவாழ்வார்
அருளாகஆராய்ந்து பார்க்கும்பேர்கள்
    ஆகாயம்நின்றநிலை யறியலாமே. 13

## அகஸ்தியர் ஞானம்-13
## முற்றிற்று.

உ

சிவமயம்

ஐம்பத்தாறுவது

## அகஸ்திய மகாமுனிவர்

# அடுக்குநிலை போதம்—10

சொல்லிறந்தவிடமெங்கே மூப்பாழெங்கே
துவாரகபாலகரெங்கே முதற்பாழெங்கே
நல்லசங்குநதியெங்கே வைகுந்தமெங்கே
நாரணனும்ஆலிலைமேற் படுத்ததெங்கே
அல்லல்படும்ஐம்பூத மொடுக்கமெங்கே
ஆறஞ்சுயிதழ்ரெண்டு முளைத்ததெங்கே
சொல்லவல்லாருண்டானா லவரைநாமுந்
தொழுதுகுருவெனப்பணிந்து வணங்கலாமே.

உந்தியெனுநிலையெங்கே அறுகோணமெங்கே
ஓங்காரநிலையெங்கே வுற்றவிடமுமெங்கே
மந்திரமுஞ்சாத்திரமும் பிறந்ததெங்கே
மறைநாலும்விரித்தவயன் தானுமெங்கே
முந்திவருங்கணபதியும் பிறந்ததெங்கே
முக்கோணமுனையெங்கே யடிதானெங்கே
இந்தவகைபொருளறிந்து சொல்வார்தம்மை
யிறையவனென்றேகருதி யியம்பலாமே. 2

பற்பதத்தில்பொங்கிவரும் வழிதானெங்கே
பரிந்துமுறைகொண்டுநின்ற அறிவுமெங்கே
உற்பனமாங்கருநின்று விளைந்ததெங்கே
யொருபாதந்தாக்கிநின்ற வடையாளமெங்கே
தற்பரமாயாகிநின்ற நிலைதானெங்கே
சர்வவுயிராயெடுத்த சிவனுமெங்கே
இப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
இறையவனென்றேகருதி யியம்பலாமே. 3

அடிமுடியுநடுவான நிலையுமெங்கே
அறுசுவையுங்கொண்டொளித்த விடமுமெங்கே
வடியானவைத்தலை மாணிக்கமெங்கே
வரையானவுமையெனு மெழுத்துமெங்கே
இடமாகஆடிநின்ற பாதமெங்கே
இச்சையுடனபேசிநின்ற யெழுத்துமெங்கே
யடைவாகப்பொருளறிந்து சொல்வார்தம்மை
யடிதொழுதுகுருவென்று நம்பலாமே. 4

சற்குருவுஞ்சகதியு மானதெங்கே
சாகாதமாலெங்கே வேகாத்தலையுமெங்கே
முப்பொருளுமொருபொருளாய் நின்றதெங்கே
முனையெங்கேதலையெங்கே முகமுமெங்கே
நற்கலமாயிரத்தெட்டிதழுமெங்கே
நாலுவகையொருபாத மானதெங்கே

இப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
யிறையவனென்றேகருதி பியம்பலாமே. 5

நஞ்சணிந்தமுகமது தானைந்துமெங்கே
ஞானக்கண்மற்றக்கண் மூன்றுமெங்கே
அஞ்சுவுயிர தனைக்கொடுக்கும் பேமமெங்கே
வாயிரக்கண்ணிந்திரனார் தானுமெங்கே
பஞ்சறிவாய்நின்றபரா சத்தியெங்கே
பதிநாலுலோகமெனு மதுதானெங்கே
வஞ்சமறப்பொருளறிந்து சொல்வாராகில்
வணங்கிகுருபரனென்று வாழ்த்தலாமே. 6

நகைபிறந்தவிடமெங்கே நினைப்புமெங்கே
நரகமேழாநரக மானதெங்கே
திகைத்துமறந்திடமெங்கே நினைப்புமெங்கே
தீராதகுறைவரைந்து சூழ்ந்ததெங்கே
பகைத்தவிடந்தானெங்கே ஒழுக்கமெங்கே
பகலிரவுயிருந்தவிடந் தானுமெங்கே
வகைப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
வணங்கிகுருபரனென்று வாழ்த்தலாமே. 7

ஆறுகால்முகமாறு மானதெங்கே
அறுபத்துநாலுகலை நின்றதெங்கே
சீறுகால்பனிரெண்டிற் கழிந்ததெங்கே
செத்திடமுஞ்சாகாதிருந் திடமுமெங்கே

பூருவமீயிருந்துவந்த புறந்தானெங்கே
புந்திதனிலன்பத்தோ ரட்சாமுமெங்கே
வேறுபொருளிறைந்துள்ள படியேசொல்வார்
மெல்லடியிலேபணிந்து மெலியலாமே. 8

ஆதிகதிர்சந்திரனும் யிறந்ததெங்கே
அவபொடுங்கிநிற்குமது விடமுமெங்கே
சாதிபலவொன்றாகக் கண்டதெங்கே
சத்தசிவமெனபிரி யாததெங்கே
ஓதியுணர்ந்தபூசை மறந்ததெங்கே
வுச்சிட்டனிட்டத்த விடமுமெங்கே
சோதிபோல்ஞானமொழி பெற்றபேர்கள்
சொல்லியதெல்லாமுடலிற் சொல்லுவாரே. 9

இருள்பிறந்தவிடமெங்கே ஒடுங்கிடமுமெங்கே
யிரண்டுதிருசசங்குநின்ற விடமுமெங்கே
அருள்பிறந்துபாடிநின்ற விடமுமெங்கே
அறுத்தடைந்தவாசமொன்று கண்டதெங்கே
திருபிறந்தவிடமெங்கே எழுகிணறுமெங்கே
திருக்கணத்திலிருக்கின்ற எத்தமெங்கே
விருப்பமுடனடுக்குநிலை போதகத்தை
விளம்பினேன்மெய்ஞ்ஞான அறிவுள்ளோர்க்கே.

## அகஸ்தியர் அடுக்குநிலை போதம்-10

முற்றிற்று.